ஆய்வுக்குச் சென்றபோது நேரடி ஒளிபரப்பில் – உங்கள் த.வெ.க. ஆட்சியில் நெல் கொள்முதல் நிலையங்களில்

# 50 ரூபாய் இலஞ்சம் பெறுவதாகச் சொன்னதை ஒத்துக் கொள்ளத் தயாரா?

## பேரவையில் – கோவி.செழியன் கேள்வி!



சென்னை, ஆக. 22 -

ஆய்வுக்குச் சென்றபோது நேரடி ஒளிபரப்பில் உங்கள் ஆட்சியில் நெல் கொள்முதல் நிலையங்களில் 50 ரூபாய் லஞ்சம் பெறுவதாகச் சொன்னதை ஒத்துக் கொள்ளத் தயாரா? என பேரவையில் கோவி.செழியன் கேள்வி எழுப்பினார்.

பேரவையில் முன்னாள் அமைச்சர் கோவி. செழியன் பேசியதாவது:

பேரவைத் தலைவர் அவர்களே, மலேசிய தேசிய பல்கலைக்கழகத்தில் Ph.D.,யில் இரண்டாம் ஆண்டு பயின்று வரும் ஆராய்ச்சி மாணவர், பாரதிதாசன் என்பவர் அம்பேத்கர் அயலக உயர் கல்வித் திட்டத்தின் உதவித்தொகை கிடைக்கவில்லை எனப் பேசியது, சமூக வலைதளங்களில் வெளிவந்திருக்கின்ற சூழலில், அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்ட த்தின் கீழ் வெளிநாட்டில் படிக்கும் மாணவர்களுக்கு உரிய நேரத்தில் இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறதா என்பதை அரசின் கவனத்திற்கு ஈர்த்து அமர்கிறேன். நன்றி.

**பேரவைத் தலைவர்:** இதனை கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்த உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்களுக்கு வினா எழுப்ப நான் அனுமதி அளிக்கிறேன். இதுகுறித்து ஏதேனும் வினா இருந்தால் நீங்கள் எழுப்பலாம்.

**முனைவர் கோவி. செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதித் துறை அமைச்சர் சொன்ன, அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டம் மாணவர் பாரதிதாசன் பெற்ற நிதி என்ற விவரத்தை முழுமையாக சொன்னார், நாங்களும் கேட்டோம். ஆனால், வானத்தில் பறக்கிற விமானத்தைப் பார்த்து விமானத்தில் ஏறுவோமா என்று ஏங்கியிருந்த கிராம ஆதி திராவிட மக்களுக்கு குறிப்பாக, நீலகிரி மாவட்டம் தேயிலை தோட்டத்து வீட்டுப் பிள்ளைகூட கனடா சென்று பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி படிக்கக்கூடிய அந்தத் திட்டத்தை அறிவித்த தலைவர் தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்த அண்ணன் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தத் திட்டத்தி ன்கீழ் தான் மாணவர் பாரதிதாசன் பயில்கிறார். 2, 3 தினங்களுக்கு முன்பு இந்தத் திட்டத்தின்கீழ் எல்லா மாணவர்களுக்கும் நிதி உதவி அளிக்கப் பட்டுவிட்டது, என்ற செய்தி பரவியதற்கு பிறகு மாணவர் பாரதிதாசன், அமைச்சர் இதுபோன்று சொல்கிறார், எனக்கு நிலுவைத் தொகை வரவில்லை, என்ற எண்ணத்தைத்தான் அவர் கருத்தாக வெளியிட்டு, அது இன்றைக்கு வெளியில் மாணவர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. அமைச்சர் இந்த தேதியில் இத்தனை இலட்சம், இந்த தேதியில் இத்தனை இலட்சம் என்று சொன்ன அனைத்து நிதி உதவியும் கடந்த திராவிட மாடல் நாயகன் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் பாரதிதாசனுக்கு வழங்கப்பட்டது உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) மாறாக மாணவர் கருத்து தெரிவித்ததற்குப் பிறகு நிதி ஒதுக்கீடு த.வெ.க. அரசு செய்திருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தால் அது மாணவர்கள் மத்தியில் குறிப்பாக, ஆதி திராவிட மாணவர்கள் மத்தியில் இருக்கிற ஐயத்தைப் போக்கும் என்று சொல்லி, எல்லாவற்றுக்கும் பிதாமகன் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் என்பதை பதிவு செய்து அமர்கிறேன்.

உணவுத் துறை அமைச்சர் அவர்கள் நெல் கொள் முதல் நிலையங்களில் கடந்த ஆட்சியில் 50 ரூபாய், 60 ரூபாய் இலஞ்சம் பெறுகிறார்கள் என்று பதிவு செய்திருக்கிறார்.

தஞ்சை மாவட்டத்திற்கு ஆய்வுக்கு வந்த போது, நேரடியாகக் கேட்கிறார், அப்பொழுதும் அவர்கள் 50 ரூபாய் தருவதாகச் சொல்கிறார்கள். அது ஒளிபரப்பப்பட்டது. அப்படியென்றால், எங்கள் ஆட்சியில் இலஞ்சம் என்று பதிவு செய்கிற நீங்கள் உங்கள் பேச்சு இந்த ஆட்சியிலும் கொள்முதல் நிலையங்களில் 50 ரூபாய் இலஞ்சம் பெறுகிறார்கள் என்று ஒத்துக் கொள்ள தயாரா? அல்லது அவர் பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நீக்கத் தயாரா என்பதை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

திருவள்ளூர் ரயில் நிலையம் அருகில்

# ஆட்டோக்கள் வருவதை தடுக்க அமைத்த தடுப்புகளால் பொதுமக்கள் கடும் அவதி!

திருவள்ளூர், ஆக.22

சென்னையில் இருந்து திருவள்ளூர், அரக்கோணம், திருத்தணிக்கு புறநகர் மின்சார ரயில்களும், காட்பாடி, திருப்பதி, மும்பை, பெங்களூரு விரைவு ரயில்களும் என தினமும் 200க்கும் மேற்பட்ட ரயில்கள் திரு வள்ளூர் ரயில் நிலையத்தில் நின்றும், கடந்தும் செல்கின்றன. மாவட்ட தலைநகரான திருவள்ளூரில் இருந்து நாள்தோறும், பள்ளி, கல்லூரிக்கு செல்லும் மாணவ, மாணவிகள், வியாபாரிகள், அரசு மற்றும் தனியார் வேலைகளுக்கு செல்லும் பெண்கள், ஆண்கள் என ஒரு லட்சம் பேர் வரை திருவள்ளூர் ரயில் நிலையத்திற்கு வந்து செல்கின்றனர்.

திருவள்ளூரிலிருந்து சென்னைக்கும், அரக்கோணத்திற்கும் புறநகர் மின்சார ரயில்களில் அதிகளவில் பயணிகள் செல்வதால் போக்குவரத்து நெருக்கடி மிகுந்த ரயில் நிலையமாக திருவள்ளூர் ரயில் நிலையம் விளங்கி வருகிறது. அதிகாலை 5 மணி முதல் 10 மணி வரையிலும், அதே போல் மாலை 4 மணி முதல் 10 மணி வரையிலும் ரயில்களில் பயணிகள் கூட்டம் அதிகளவில் காணப்படுகிறது. ரயில் நிலையத்தில் இறங்கும் பயணிகளை ஏற்றி செல்ல 200க்கும் மேற்பட்ட ஆட்டோ ஓட்டுனர்கள் ரயில் நிலைய வளாகம் அருகே நிறுத்தி பயணிகளை ஏற்றி சென்று வந்தனர். அதேபோல் பிற பகுதி ஆட்டோ ஓட்டுனர்களும் ரயில் நிலையம் அருகே பெரியகுப்பம் பஸ் நிலையம் அருகே நிறுத்தி பயணிகளை ஏற்றி செல்கின்றனர்.

இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளாக அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் ரூ.28 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இதனால் ரயில் நிலைய முகப்பு பகுதியில் சீரமைப்பு பணிகள் நடைபெறுவதால் ரயில்வே ஆட்டோ ஓட்டுனர்களை உள்ளே அனுமதிக்காமல் ரயில் நிலையத்தை ஒட்டியுள்ள அகர தெருவில் ஆட்டோக்களை நிறுத்தி பயணிகளை ஏற்றி சென்று வருகின்றனர். மேலும் ஆட்டோக்கள் ரயில் நிலையம் அருகில் வரக்கூடாது என்பதற் காக காவல் துறை சார் கப்பட்டது. ஆங்காங்கே அமைக்கப்பட்ட அந்த தடுப்புகளை தற்போது ஒரே இடத்தில் வைத்து இருப்பதால் நடந்து செல்பவர்கள், இரு சக்கர வாகனத்தில் செல்பவர்கள் அவசரத்திற்கு செல்ல முடியாத நிலை இருந்து வருகிறது. அதே நேரத்தில் ரயில் நிலையம் அருகே போக்குவரத்து போலீ சார் தொடர் கண்கா ணிப்பில் இல்லாததால் வாகன போக்குவரத்தை சீர்செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. மேலும் அவ சர அவசரமாக ரயில் நிலையத்திற்கு செல்ல வேண்டியவர்கள் செல்ல முடியாத நிலை இருந்து வருகிறது.

எனவே ரயில்வே நிர்வாகமும், நகராட்சி நிர்வாகமும், திருவள்ளூர் மாவட்ட காவல்துறையும் இணைந்து ரயில் நிலையத்திற்கு வரும் பயணிகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் போக்குவர்தை சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ரயில் பயணிகளும், பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க.சொ. கணேசன்
### ஆகஸ்ட் 22 (2005)



பள்ளிப்பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, ஜெயங்கொண்டம் பகுதியிலே கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவர் இவர்.

1967ஆம் ஆண்டு உடையார்பாளையம் வட்டக் கழகச் செயலாளராகவும், ஒன்றிய சீரணித் தலைவராகவும், 25 ஆண்டுகள் தொடர்ந்து ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

1964ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

1986ஆம் ஆண்டு தா.பழூர் ஒன்றியப் பெருந்தலைவராகவும், 1989 மற்றும் 1996 ஆகிய இருமுறை ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராகவும், பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

“களம் பல கண்டவனே, சிறை பல சென்றவனே, உளம் கவர் உரையாற்றிப் பேரவையில் வென்றவனே, குளம் என எமது கண்கள் நீர்நிறைய, கணப் பொழுதில் மறைய; மனம், ஏன் வந்ததோ ? எப்படித்தான் வந்ததோ–” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# சென்னை கிழக்கு மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (22.08.2026 சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி எண்.7, செல்லப்பா தெரு என்ற முகவரியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சார்பு அணிகள் இளைஞரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, தகவல் தொழில்நுட்ப அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, வர்த்தக அணி, பொறியாளர் அணி, தொண்டரணி, தொழிலாளர் அணி, ஓட்டுனர் அணி, அயலக அணி மீனவர் அணி, ஆதி திராவிடர் நலத்துறை அணி, மருத்துவ அணி, சுற்றுச்சூழல் அணி, வழக்கறிஞர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் அணி ஆகிய அணிகளின் அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்

**பி.கே.சேகர்பாபு, எம்.எல்.ஏ.**
செயலாளர்
சென்னை கிழக்கு மாவட்ட திமுக.

717 டாஸ்மாக் கடைகள் மூடுவதாக் கூறிவிட்டு வருவாய் இழப்பை சமாளிக்க இடமாற்றமா?

# பொதுமக்கள் பாதுகாப்பு என கூறிவிட்டு அதிக விற்பனை கடைகளுக்கு குறி!

## த.வெ.க. அரசின் இரட்டை நிலைப்பாட்டால் சர்ச்சை!

சென்னை, ஆக. 22-

பள்ளி, கல்லூரிகள், வழிபாட்டுத் தலங்கள், பேருந்து மற்றும் ரயில் நிலையங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களின் அருகே செயல்பட்டு வந்த 717 டாஸ்மாக் மதுக்கடைகளை மூடிய தமிழக அரசு, தற்போது அவற்றில் அதிக விற்பனை நடைபெற்ற முக்கியமான கடைகளை வேறு இடங்களுக்கு மாற்றுவது குறித்து ஆலோசித்து வருவது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகக் கூறி, பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் இருந்து 500 மீட்டர் தூரத்துக்குள் செயல்படும் மதுக்கடைகளை மூட முதலமைச்சர் விஜய் உத்தரவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதன்படி விதிகளை மீறி செயல்பட்டதாக கூறப்பட்ட 717 மதுக்கடைகள் மூடப்பட்டன. இதனால் அரசுக்கு சுமார் ரூ.11 ஆயிரம் கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால், கடைகளின் எண்ணிக்கை குறைக்க ப்பட்டதால் அருகில் உள்ள டாஸ்மாக் கடைகளில் கூட்டம் அதிகரித்து பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுவதாக தற்போது அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மூடப்பட்ட 717 கடைகளில் அதிக விற்பனை நடைபெற்ற முக்கியமான கடைகளை இடமாற்றம் செய்வதே சிறந்த தீர்வு என அமைச்சர் விக்னேஷ் கூறியிருப்பது, அரசு எடுத்த நடவடிக்கையின் நோக்கம் குறித்த கேள்வியை எழுப்பியுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு, பெண்களின் பாதுகாப்பு ஆகியவற்றை காரணம் காட்டி மதுக்கடைகள் மூடப்பட்ட நிலையில், அதிக விற்பனை நடைபெறும் கடைகளை மட்டும் வேறு இடங்களில் மீண்டும் செயல்படுத்தும் முயற்சி ஏன் என்ற கேள்வியை சமூக ஆர்வலர்கள் எழுப்பியுள்ளனர்.

இதனால் மதுவிற்பனையை கட்டுப்படுத்துவதா அல்லது அரசின் வருவாயை பாதுகாப்பதா என்பதில் தமிழக அரசின் நிலைப்பாடு என்ன என்ற விவாதமும் உருவாகியுள்ளது. இதனிடையே, மது பாட்டிலுக்கு ரூ.10 கூடுதலாக வசூலிக்கும் பிரச்சினையை தடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக தொடரும் இந்த பிரச்சினையை முழுமையாக தடுக்க முடியாமல் இருப்பது குறித்தும், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களின் அருகே மதுக்கடைகள் செயல்படக் கூடாது என அறிவித்து 717 கடைகளை மூடிய அரசு, வருவாய் இழப்பு மற்றும் அருகேயுள்ள கடைகளில் கூட்டம் அதிகரிப்பு ஆகிய காரணங்களை முன்வைத்து மீண்டும் கடைகளை இடமாற்றம் செய்யும் முடிவுக்கு செல்வது, பொதுநலனா வருவாய் நோக்கமா என்ற கேள்வியை பொது மக்கள் மத்தியில் எழுப்பியுள்ளது. இதற்கிடையே, மூடப்பட்ட 717 டாஸ்மாக் கடைகளின் முழுமையான பட்டியலையும் நேற்று தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரம் வடக்கு பகுதி 15வது வட்டத்தில் கலைஞர் நினைவு நாள்!

## கே.அங்குசாமி, எஸ்.கோபாலகிருஷ்ணன், எஸ்.புஷ்பராஜ், இ.சீனிவாசன் பங்கேற்பு!

மாதவரம், ஆக.22-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் 15வது வட்டம் பழையநாபாளையம் பகுதியில் அமைந்துள்ள அண்ணா முதியோர் காப்பகத்தில் வசிக்கின்ற அனைவருக்கும் அறுசுவை காலை அசைவ உணவு வழங்கப்பட்டது.

பதினைந்தாவது வட்டச் செயலாளர் கே.அங்குசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். கோபாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார்.

அண்ணா காப்பகத்தில் வசிக்கின்ற மாணவர்கள், முதியவர்கள், பணியாளர்கள் என அனைவருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு காலை அறுசுவை அசைவ உணவு வழங்கப்பட்டது மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு அசைவ உணவுகளை வழங்கினார். மேலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பகுதி ஆதிதிராவிடர் நல குழு துணை அமைப்பாளர் எஸ். புஷ்பராஜ், வட்ட இளைஞரணி துணை செயலாளர் எ.சீனிவாசன், மணலி புதுநகர் வினோத் உள்ளிட்ட திமுகவினர் திரளாக கலந்து கொண்டார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு நாளை முன்னிட்டு தங்களது காப்பகத்திற்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிய கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் காப்பக நிர்வாகிகள் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

எண்ணூரில் உள்ள தனியார் உரத் தொழிற்சாலையை நிரந்தரமாக மூடக்கோரி

# சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம்!

## பாரத மக்கள் கழகம் சார்பில்!

தண்டையார்பேட்டை, ஆக. 22

எண்ணூரில் உள்ள தனியார் உரத்தொழிற்சாலையை மூடக்கோரி பாரத மக்கள் கழகம், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டம் நடத்தியது.

எண்ணூரில் தனியார் உரத்தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. இந்த தொழிற்சாலையில் கடந்த 2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் தேதி இரவு 11.30 மணியளவில் அளவுக்கதிகமாக அமோனியா வாயு கடல் வழியாக வெளி வந்து விபத்து ஏற்பட்டது.

பெரியகுப்பம், சின்ன குப்பம், தாழங்குப்பம் உள்ளிட்ட 18 கிராமங்களில் உள்ள மக்களுக்கு மூச்சுத் திணறல், மயக்கம் ஏற்பட்டு பாதிப்புக்குள்ளாகினர். 60க்கும் மேற்ப ட்டோர் தனியார் மருத்துவமனை, அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

கடலில் மீன்களும் செத்துமிதந்தன. இதனால் அந்த பகுதியில் உள்ள மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. சிகிச்சையில் இருந்த பலர் உயிரிழந்தனர். இந்த தொழிற்சாலை இயங்கினால் மேலும் பல உயிரிழப்பு ஏற்படும் அபாயம் இருப்பதாக, பாரத மக்கள் கழகம் பல்வேறு போராட்டங்களை நடத்தியது.

இந்த நிலையில், பாரத மக்கள் கழகம் சார்பில் அதன் தலைவர் பிரபாகரன் தலைமையில் தனியார் உரத்தொழிற்சாலையை நிரந்தரமாக மூடக்கோரி சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பின்னர் அவர், நிருபர்களிடம் கூறியதாவது:

கடந்த 2023ம் ஆண்டு எண்ணூரில் உள்ள தனியார் உரத் தொழிற்சாலையில் விபத்து ஏற்பட்டு, அமோனியா வாயு கசிந்து, வடசென்னை மக்கள் பலர் உயிரிழந்தனர். இந்த பகுதி மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதை சரி செய்ய உரத்தொழிற்சாலையை நிரந்தரமாக மூடக்கோரி பாரத மக்கள் கழகம் பல்வேறு போராட்டங்கள் நடத்த அனுமதி கேட்டும் கிடைக்க வில்லை. தற்போது போராட்டத்திற்கு அனுமதி கிடைத் துள்ளது. முதல்வர் விஜய் உத்தரவிட்டு தொழிற்சாலையை நிரந்தரமாக மூட வேண்டும் என்பது எங்க ளின் கோரிக்கையாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.



மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 15 வது வட்டம் பழையநாபாளையம் அண்ணா காப்பகத்தில் அறுசுவை காலை உணவு வழங்கப்பட்டது. 15வது வட்டச் செயலாளர் கே. அங்குசாமி தலைமையில் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். கோபாலகிருஷ்ணன் முன்னிலையில் எஸ். புஷ்பராஜ் எ. சீனிவாசன், வினோத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.